பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 08 2024 **FRIDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. இல்லந்தோறும் தேசியகொடி ஏற்றும் இயக்கத்தில் பொதுமக்கள் அனைவரும் வரும் 9-ஆம் தேதி முதல், 15-ஆம் தேதிவரை பங்கேற்க வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.
2. நீட் தேர்வை ரத்து செய்ய முடியாது என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு மத்திய அரசின் நிலைப்பாட்டை உறுதி செய்துள்ளதாக கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.
3. விவசாயிகள் நலனில் அக்கறையின்றி காங்கிரஸ் செயல்பட்டு வருவதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் குறை கூறியுள்ளார்.
4. தமிழகத்தில், நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ், அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல், புதிய விலையில் நெல் கொள்முதல் செய்யப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.
5. பாரிஸ் ஒலிம்பிக் வில்வித்தை போட்டியில் இந்தியாவின் அங்கிதா பகத் - **Dhiraj** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. ஹாக்கிப்போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<<<>>>>>>

இல்லந்தோறும் தேசியகொடி ஏற்றும் இயக்கத்தில் பொதுமக்கள் அனைவரும் வரும் 9-ஆம் தேதி தொடங்கி, 15-ஆம் தேதிவரை பங்கேற்க வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்

தேசியக்கொடியை வடிவமைத்த சுதந்திரப்போராட்ட வீரர் **Pingali Venkayya** –வின் பிறந்த தினத்தையொட்டி வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் உரையிலும் பிரதமர் இதனை குறிப்பிட்டு பேசினார்.

<<<<<<<>>>>>>

நீட் தேர்வை ரத்து செய்ய முடியாது என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு மத்திய அரசின் நிலைப்பாட்டை உறுதி செய்துள்ளதாக கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், போட்டித்தேர்வுகளை வெளிப்படைத்தன்மையுடன் நடத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எவ்வித முறைகேடுகளும் இன்றி தேர்வுகள் நடைபெறுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்காக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட உயர்நிலைக்குழு சமர்ப்பிக்கும் பரிந்துரைகள் முழுமையாக செயல்படுத்தப்படும் என்றும் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

விவசாயிகள் நலனில் அக்கறையின்றி காங்கிரஸ் செயல்பட்டு வருவதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் குறை கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், விவசாயிகளின் நலனுக்காக மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளில் நிறைவேற்றிய திட்டங்களை பட்டியலிட்டார்.

உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், செலவினங்களை குறைக்க வேண்டும், வேளாண் விளைப்பொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும், இயற்கை பேரிடரின்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும் போன்ற அம்சங்களை அடிப்படையாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இயற்கை வேளாண்மைக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மின்சார வாகனங்களை பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது. மாநிலங்களவையில் இதனை தெரிவித்த கனரக தொழில்துறை அமைச்சர் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மா, கடந்த நிதியாண்டில் 16 லட்சத்திற்கும் மேற்பட்ட மின்சார வாகனங்கள் பதிவு செய்யப்பட்டதாக கூறினார்.இது அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 42 சதவீதம் அதிகமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நாட்டின் முதலாவது புல்லட் ரயில் திட்டத்திற்கான பணிகள் மும்பை -அகமதாபாத் இடையே நடைபெற்று வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 320 கிலோமீட்டர் தொலைவிற்கான இந்த பணிகள் ஜப்பான் நாட்டு உதவியுடன் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 32 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு **Pratap Rao Jadhav** கூறியுள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், இந்த காய்ச்சல் பாதிப்பு குறித்து மத்திய அரசு உரிய கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

**<<<<<<<>>>>>>**

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, **Fiji,** நியூசிலாந்து மற்றும் **Timor Leste-**விற்கு அரசு முறைப்பயணம் மேற்கொள்கிறார். வரும் திங்கட்கிழமை தொடங்கி, 10-ஆம் தேதிவரை இந்த பயணத்தை அவர் மேற்கொள்ள உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

**<<<<<<<>>>>>>**

அரசியலமைப்புச்சட்டம் குறித்தும், சட்ட உரிமைகள் குறித்தும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், பல்வேறு துறைகள் மூலம் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கூறினார். இது 48 கோடிக்கும் மேற்பட்டோரை சென்றடைந்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>>**

விமான பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பில் 100 சதவீத நேரடி அந்நிய முதலீடு அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை இணையமைச்சர் திரு **Murlidhar Mohal** கூறியுள்ளார். மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

**<<<<<<<>>>>>>**

விவசாயிகளுக்கு நியாயமான விலையில் உரங்கள் கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக உரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார். இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதற்காகத்தான் உரமானியம் வழங்கப்படுவதாக கூறினார். இயற்கை உரங்கள் பயன்பாட்டிற்கும் மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>>**

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக 80 கோடிக்கும் மேற்பட்டோர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டதற்கு ஐ நா பாராட்டு தெரிவித்துள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ராஜீவ் சந்திரசேகர், டிஜிட்டல் இந்தியா இயக்கம் இதில் முக்கிய பங்கு வகித்ததாகவும் தெரிவித்தார்.

ஏழை மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களும் இதற்கு உறுதுணையாக இருந்ததாக திரு ராஜீவ் சந்திரசேகர் கூறினார்.

<<<<<<<>>>>>>

நடப்பு நிதியாண்டில் 7 கோடியே 28 லட்சம் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 7 புள்ளி ஐந்து சதவீதம் அதிகமாகும் என்று நிதியமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

புதிய வரி கட்டமைப்பின்கீழ், வரி செலுத்தும் முறையை தேர்வு செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில், நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ், அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல், புதிய விலையில் நெல் கொள்முதல் செய்யப்படும் என்று தமிழக அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக உணவு அமைச்சர் திரு சக்ரபாணி விடுத்துள்ள அறிக்கையில், இதன்படி, சன்ன ரக நெல் குவிண்டாலுக்கு 2 ஆயிரத்து 450 ரூபாய் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

பொது ரக நெல்லை பொறுத்தவரை குவிண்டால் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 405 ரூபாய் வழங்கப்படும் என்றும் திரு சக்ரபாணி கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்படும் என்று கர்நாடகா வனத்துறை அமைச்சர் திரு **Eshwar Khandru** கூறியுள்ளார்.

பெங்களுருவில் இதுதொடர்பான ஆலோசனைக்கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், இதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஒருமாத காலத்திற்குள் இதுதொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

ஓய்வுபெற்ற இந்திய தகவல் பணி அதிகாரி திரு கே கே **Pant** இன்று குருகிராமில் காலமானார். அவருக்கு வயது 64.

புதுதில்லி செய்திப்பிரிவு உட்பட தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பல்வேறு அலுவலகங்களில் அவர் பணியாற்றியுள்ளார்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் வில்வித்தை போட்டியில் இந்தியாவின் அங்கிதா பகத் - **Dhiraj** இணை அரையிறுதியில் தோல்வியடைந்ததையடுத்து, வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் பங்கேற்கவுள்ளது.

-----------------

ஹாக்கிப்போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

கேப்டன் ஹர்மன் பிரீத் சிங் இரண்டு கோல் அடித்தார்.

---------------

துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் மனுபாக்கர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் 25 மீட்டர் தரவரிசை போட்டியில் பெற்ற கூடுதல் புள்ளிகளின் அடிப்படையில் அவர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

------------------

இலங்கைக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 231 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 11 ஓவரில், விக்கெட் இழப்பின்றி 74 ரன் எடுத்துள்ளது.

கொழும்பில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த இலங்கை, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில், 8 விக்கெட் இழப்பிற்கு 230 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக **Dunith Wellalage** 67 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

அக்ஷர் பட்டேல் மற்றும் **Arshdeep Singh** தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

<<<<<<<**END**>>>>>>